

# “ சி-த்தன் ”

ஓர் மாதாந்தப் பத்திரிகை.


| மாலை 1. | மார்ச் ௧ 35. | மணி 3. |
|---|---|---|
| Vol. 1. | March. | No. 3. |


உள்ளுரை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள்வழிபாடு ... ... | 65. |
| 2. | வாழ்த்துப்பா ... .... | 66. |
| 3. | ஆரம்பக்கல்வி ... ... | 67. |
| 4. | அன்பு ... ... | 69. |
| 5. | கடற்பாசியின் உபயோகம் ... | 72. |
| 6. | ரோஜா ... ... | 75. |
| 7. | எதிர் வெடிகள் ... ... | 76. |
| 8. | ஆரம்ப ஆசிரியர் குறைகள் .... | 78. |
| 9. | [illegible] செப் பகுதி ... ... | 80. |
| | [illegible] ... | 81. |
| | [illegible] ... ... | 86. |
| | [illegible] ... ... | 89. |
| | [illegible] ளாட்டி ... | 93. |
| | ... .... | 97-100. |



ന2ЧЧ, N35CN

N35·1·3.

189418



ஆசிரியர் C. P. சாமி.

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம், வைத்தியம், சுகாதாரம் முதலிய அரிய கட்டுரைகளுடனும், தமிழ் வைத்தியர்கட்கு பெரிதும் பயன்படும் விஷயங்களுடனும் ஆங்கிலத் திங்கள் தோறும் பழனியினின்றும் வெளிவருகிறது.

### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு | உள் நாடு | ... | ரூ. 0—8—0. |
| ,, | வெளி நாடு | ... | ரூ. 1—0—0. |
| | தனிப்பிரதி | ... | ரூ 0—1—0. |

சந்தாத் தொகையை முன்னாடியே செலுத்திவிடவேண்டும். வி. பி. யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எப்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அவ்வருட ஜனவரி மீ-முதல் கணக்கு வைக்கப்பட்டு, ஜனவரி-மீ சஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும். பதில் விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்,

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு | முழுப்பக்கம் | ரூ. 5—0—0, |
| ,, | அரைப்பக்கம் | ரூ 3—0—0. |
| ,, | கால்பக்கம் | ரூ. 1—8—0. |

N B:— நீடித்து விளம்பரஞ்செய்வோர் எமக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,

# "சித்தன்"

## பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

## மாதாந்தப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.


| | | |
|---|---|---|
| மாலை 1. | மார்ச்சு 1935. | மணி 3. |


"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில" (குறள்)

இகபரமு முயிர்க்குயிரை யானெனதற் றவருறவை
யெந்த நாளுஞ்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத்
துரிய வாழ்வை
யக்மகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
யமிர்தை நாடி
மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கண்
முகிழ்த்து நிற்பாம்.

(தாயுமானவர்.)

8914
600 003

# வாழ்த்துப்பா.

(சாமி, விருதை, V. சிவஞான யோகிகள்.)

திருமகளும் கலைமகளும் மலைமகளும்
தந்தருளும் சித்தியெல்லாம்
ஒருமணியில் வரச்செய்து காயசித்தி
யோகசித்தி யுலகின்மேலாம்
பெருமைமிகு ஞானசித்தி பெற்றுயர்ந்த
சித்தர்கடம் பிறங்குநூல்கள்
மருவியுரை பொருளாய்ந்து பலசொல்லிற்
"சித்தனென" மன்பேர்தந்தே.

பலவரிய பொருள்களையும் பகுதிகளாப்
பகுத்துரைத்துப் பல்லோர்போற்ற
நிலவுமெழின் மிகுதிங்கட் புதினத்தாள்
வெளியிட்டு மேன்மையுற்றான்
கலைசிறந்த மலையப்ப சாமிவைத்ய
சாலையினுக் கதிபனான
நலமிகுந்த பழநிநகர் தனில்வாழ்பொன்
னுச்சாமி ஞானவானே.



# ஆரம்பக் கல்வி.

நாம் உலகவாழ்வில் அடையவேண்டிய பலனை எளிதில் அடையவேண்டுமானால் அதற்காதாரமாயுள்ள கல்வி அவசியம் வேண்டும். எப்படிப்பட்ட கல்வியைக் கற்கவேண்டுமானாலும் அதற்கும் ஓர் அஸ்திவாரம் வேண்டும். அடிப்படையின்றி சுவர் நில்லாது. அதன் வலுவினால்தான் பெரிய கட்டிடங்கள் கட்டுகிறார்கள். அதுபோலவே எக்கல்விக்கும் ஆதாரமாயுள்ளது ஆரம்பக் கல்வியேயாகும். சிறுவர்கட்கு அதுவும் முன்பின் எவ்விதப்பயிற்சியும் இராதவர்களுக்கு புதிதாக ஒரு பாஷையைக் கற்பிப்பதும், எண்களைப்போதிப்பதும் சுலபமான காரியமல்ல. சிறுவர்களின் மனது கண்ணாடியைப்போன்றது. அவர்களுக்குப் போதிக்கப்படும் போதனை நல்லவைகளா அல்லது கெட்டவைகளா என்று அறியுமாற்றல் இல்லாதவர்களாகையால் கற்பிப்பவைகளை ஏற்றுக்கொள்ளும் இயல்பினை உடையவர்களாய் இருக்கின்றனர். ஆதலால் ஆரம்பத்தில் சிறுவர்களுக்குப் போதிக்கப்படும் ஆரம்பக்கல்வியானது நல்லவர்களைப் புகழ்ந்து அவர்களது முறைகளை சிறுவர்கள் பின்பற்றி ஒழுகவும், தீயவர்களை இகழ்ந்து அவர்களுடன் நேசங்கொள்ளாது வெறுக்கவும் தக்கனவாய் இருத்தல் வேண்டும். இவ்வாறு சிறுவர்களுக்குப் போதிக்கப்படும்திறமை ஆரம்ப ஆசிரியர்களுக்கு அத்தியாவசியமன்றோ!

ஆறு காசுக்கு ஒரு குதிரையும் வேண்டும்; அது ஆயிரம் மைல் போகவும் வேண்டுமென்பதுபோல குறைந்த சம்பளமுள்ள ஆசிரியர்கள் வேண்டும்; குழந்தைகளுக்கு சன்மார்க்கபோதனை புகட்டவும் வேண்டுமென்றால் எப்படி முடியும்? அவ்வாசிரியருக்கு சதா வயிற்றுப் பசியன்றோ இருக்கும். இவர்களின் தொழிலையும் சம்பள விஷயங்களையும் கவனிக்கிறபொழுது இவர்கள் மிகவும் தாழ்த்தப்பட்ட நிலைமையில் இருக்கிறார்களென்றே சொல்லவேண்டும். நமது தாய் நாடு சுதந்திரம்பெற முட்டுக்கட்டையாக இருப்பதற்கு இவ்வாரம்ப ஆசிரியர்களுடைய தாழ்த்தப்பட்ட நிலைமையே

காரணமென்றும் சொல்லலாம். தற்போது முன்னேற்றம் அடைந்திருக்கிற இங்கிலாந்து, அமெரிக்கா, சைனா, ஜப்பான்போன்ற தேசங்களின் வரலாறுகளை வாசிப்போமானால் அத் தேசங்களிலெல்லாம் ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பளம் நூற்றுக்கணக்காகக் கிடைக்கின்றது எனவறியலாம். சிறுவர்களுக்குப் போதிப்பதுமாத்திரம் தன் வேலை எனக்கருதாது அவர்கள் பொதுநலங்கருதிப் பாடுபடுவதால் அத் தேசங்கள் க்ஷேமமடைகின்றன! செல்வம் பொங்குகின்றது. அங்கே 100-க்கு 95-பேர் படித்தவர்களாயிருக்கின்றனர். இதிலிருந்து அயல் தேசத்தார் ஆரம்ப ஆசிரியர்களிடம் எவ்வாறு நடந்துகொள்கின்றனர், ஆரம்பக்கல்விக்கு எவ்வளவுசிரத்தை எடுத்துக்கொள்கின்றனரென்பதுவிளங்கும்.

நமது நாட்டில் உயர்தரக் கல்வியில் செலுத்தப்படும் கவனம் ஆரம்பக் கல்வியில் செலுத்தப்படுவதில்லை என்றே சொல்லலாம், கையெழுத்து கூட போடத்தெரியாதவர்கள் கோடிக்கணக்கானவர்கள் நம் நாட்டிலுளர். அதைச்சீர்திருத்தம் செய்வதற்கு பாடசாலைகளில்லாத இடங்களில் ஆரம்பப்பாடசாலைகளை அமைத்தும் எல்லா மக்களும் தவறாமல் கல்வியறிவு பெறும்படியான் நிலைமையிலமைக்கப்பட்டும் அவைகளில் போதிக்கப்படும் கல்விமுறை பிற்காலத்தில் போதிய பயனளிக்கத்தக்கதாயும் ஏற்பாடு செய்தாலன்றி ஆரம்பக்கல்வியானது முன்னேற்றமடைய வழியிராது.

ஆதலால் ஆரம்பக் கல்வியின் அத்தியாவசியத்தை உணர்ந்து அதற்காகச் செலவழிக்கப்படும் பொருள்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கென எண்ணி அதிகாரிகளும் பொது மக்களும் சிரத்தை காட்டவேண்டும். ஆரம்பக் கல்வியைக் கட்டாயக்கல்வியாக்கவேண்டும். நம் நாட்டில் ஆரம்ப ஆசிரியர்களைக் கண்ணியமாக நடத்தி அவர்களின் தரித்திரதிசையை நிவர்த்திசெய்தால் ஆரம்பக்கல்வியானது மென்மேலும் விருத்தியடையும். பிற்கால மக்கள் அறிவுடையவராகி சிறந்து வாழ்வர்.

ஆசிரியன்.



# அன்பு.

இவ்வுலகில் நாம் இன்புற்று வாழ்வதற்கு அனுசரிக்கவேண்டியவைகளில் அன்பும் ஒன்றாகும். அன்புடைய உள்ளம் சதாகளிப்படைவதால் அகத்தினழகு முகத்தில் தெரியுமென்றபடி முகமும் மலர்ச்சியுடனிருப்பதைக் காணலாம். இதனாற்றான் அன்புடையவர்பால் யாவரும் எளிதில் நேசங்கொள்ள விரும்புகின்றனர். அவர் எடுத்துக்கொள்ளும் எக்காரியமும் சுலபமாய்க் கைகூடுகிறது. சர்வலோக ரக்ஷகரெனக் கொண்டாடும் பரம்பொருளே அன்பு வலையில் அகப்படுவோனெனில் அன்பின் வலிமைபற்றி வேறு என்ன சொல்லவேண்டும்! இவ்வளவு சிறப்புவாய்ந்த அன்புவாழ்க்கையை மக்கள் யாவரும் அனுசரிப்பார்களானால் அவர்கள் அடையும் பயனும் சிறப்பும் வேறு யாரால் எடுத்துரைக்க முடியும். உதாரணமாக அன்பே உருவாகக்கொண்ட நமது மகாத்மா காந்தியடிகளை எடுத்துக்கொள்வோம். அவரைக் காணும் அவரது விரோதிகளும் அவர்பால் அன்புகொண்டு ஒழுகுவதைக் காண்கிறோம். காரணமென்ன? அவர் பிறர்பால் வைத்திருக்கும் அன்பன்றோ!

அன்பு என்பது நம்மிடம் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. அதை அறியாமை என்ற பேய் மூடிக்கொண்டிருப்பதால்தான் நம்மிலனேகர் பிறரிடம் அன்பு செலுத்துவதற்குப்பதிலாக பகைமை பூண்டு, பொறாமை, கோபம் முதலிய துர்க்குணங்கள் உள்ளவர்களாய் இருக்கின்றனர். அவ்வறியாமைப்பேயை ஓட்ட கல்வி என்னும் சாட்டை மிகவும் அவசியம். ஸ்படிகமானது இயற்கையில் பிரகாசமுடையதாயினும் எவ்வாறு பாசியினால் மூடப்பட்டிருக்கும்போது அதன் பிரகாசம் குன்றியும் பாசியானது நீக்கப்பட்டவுடன் இயற்கைப் பிரகாசம் தோன்றியும் புலப்படு

கிறதோ அதுபோல் ஆன்மாவை மூடியிருக்கும் பாசி போன்ற ஆணவமலம் விலகுமானல் இயற்கைப்பிரகாசமான அறிவு என்பது தோன்றும். அறிவு தோன்றவே அன்பும் புலப்படும். ஆகவே இயற்கையாகவே முளைக்கும் அன்பானது நன்றாய் வளர நல்லொழுக்கம் என்னும் தண்ணீர் பாய்ச்சினல் அருளென்னும் பயிர் தானே தழைக்கும். அப்போது இன்பபோகத்தை எளிதிலடைய ஏதுவாகும்.

மேலும் கற்றோருடைய சேர்க்கையும் கல்வியாராய்ச்சியும் வேண்டப்படுவன என்பதற்கு

"நிலத்தியல் பானீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல் பதாகு மறிவு"

என வள்ளுவரும் மொழிந்தனர்.

"நல்லா ரிணக்கமும் நின்பூசைநேசமு ஞானமுமே
யல்லாது வேறு நிலையுள தோவகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சியே கம்பனே

என்று பட்டினத்தடிகளும் கூறியிருக்கின்றனர்.

ஒரு குழந்தையானது முதலில் தாயிடத்திலும், பின் தந்தை, உற்றார், உறவினர், நண்பர் முதலானவர்களிடத்திலும் அன்பு செலுத்துவதைக் காண்கின்றோம். இதனால் அறிவு விருத்தியாகும்போது அன்பும் விருத்தியாகிறது எனத்தெரிகிறது. அவ்வன்பானது பெற்றோர் பிள்ளைகளிடம் காட்டுவதற்கு வாஞ்சையென்றும், காதலன் காதலி இவ்விருவர்கட்குள்ளும் ஏற்படுவது காதல் என்றும், நண்பர்களுக்குள் உண்டாவது நட்பென்றும், தாழ்ந்த ஜீவராசிகளிடத்து உண்டாவது இரக்கம் என்றும் பெயர் பெறும்.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு"



என்பதிலிருந்து அன்பின் மாண்பு நமக்குத் தெள்ளெனத் தெரியவருகிறது.

அன்பானது அன்புள்ள இடத்தை நாடுமேயல்லாது அது இல்லாத பிறவிடத்தை நாடாது. ஆதலால் ஆடவர் அன்போடு தம் மனைவிமார்களை நடத்தாவிடின் அவர்கள் எங்ஙனம் தங்களிடம் அன்பு பூண்டொழுகுவர், தங்களைவிடப் பெண்கள் தாழ்ந்தவர்கள் என எண்ணி அவர்களை அடிமைகளாக நடத்திவரும் ஆடவர்களைப்பற்றி பெண்களின் அபிப்பிராயம் என்னவென்பதை இவர்களறியார்கள் போலும்.

துஷ்ட மிருகங்களாகிய புலி சிங்கம் ஒன்றையொன்று ஏற்றத்தாழ்வாக நடத்துகிறதில்லை. மக்கட்பிறப்பினராகிய நாம் அவ்விலங்குகளிலும் கொடியவர்களா? நமக்கேன் இந்த அன்பின் தன்மை தெரியவில்லை?

பறவை இனத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தூக்கணங்குருவியானது தன்னுடைய பேடையைக் கூட்டிலிருக்கும்படி செய்துவிட்டு இரையின்பொருட்டு தான் வெளியே போய் இரை தேடிக்கொண்டுவந்து முதலில் தன் பேடைக்குக்கொடுத்து பின்பு தான் இரை கொள்ளுகிறது. என்னே! இதனின் அன்பு. இந்தப்பறவை தன்னுடைய பேடையை எவ்வளவு கௌரவத்துடனும் மதிப்புடனும் நடத்துகிறது. கேவலம் பக்ஷிஜாதிகளே இவ்விதமாகச் சமத்துவமளித்து வாழும்போது அறிவுள்ளவர்களெனப் பெருமை பாராட்டும் மனிதவர்க்கமாகிய நாம் எவ்வாறு நமது மனைவிமக்களை நடத்தவேண்டும்.

ஆதலால் நாமனைவரும் அன்பெனும் கயிற்றால் பிணிக்கப்பட்டு ஒற்றுமையுடன் வாழ்வோமாக.

# கடற் பாசியின் உபயோகம்.

# 73-வயது வயோதிகரின் ரகசியம்.

---

## வாலிபமடைந்து வருவதாக நினைக்கிறார்.

### (சென்னையில் டாக்டர் பேக்கர்'.)

"சாதாரணமாக மனிதன் 120-வயதுவரையில் உயிர் வாழவேண்டும். 115-வது வயதில் அவன் 20, 25-வயதில் எவ்வளவு சுறுசுறுப்புடன் இருப்பானோ அவ்வளவு சுறுசுறுப்புடனிருக்கவேண்டும்." சிகாகோ சர்வகலாசாலையில் முன்பு இருந்த டாக்டர், ஈ. எச். பேக்கர் இதைத்தான் நம்புகிறார்.

சென்னையில் வந்திருக்கும் இவருக்கு 73-வயதாகிறது. நல்ல உயரம், குரங்கு தசை சத்துகளிலும் வெள்ளாட்டு இரத்தாசயங்களிலும் இவருக்கு நம்பிக்கை கிடையாது. அவரது இரகசியத்தின் ஒரு பகுதி கடற்பாசியின் உபயோகமாகும்.

அவர் கூறியதாவது:—

"இரண்டு வருடங்களுக்கு முன்பு நான் ஒரு ரகசியத்தைக்கண்டுபிடித்தேன். இந்த ரகசியம் எனக்கு முன்பே தெரிந்திருந்தால் நிச்சயமாய் எனக்குத் தலையில் 'வழுக்கை விழுந்திருக்காது; பல்வைத்தியரிடம் போகும் அவசியமும் நேர்ந்திருக்காது.

நான் இளமையடைந்து வருவதாக எனது நண்பர்கள் கூறுகின்றனர். சிலவருடங்களுக்கு முன்பு நான் ஒரு வயோதிகனாகவே இருந்தேன். சென்ற ஒன்றிரண்டு வருடங்களுக்குள் எனது வயோதிகத்தில் நேர்ந்த மாறுதல் மக்களுக்கு நன்றாகத் தெரிந்தது. இந்த ரகசியம் எனது இளமையிலேயே தெரிந்திருந்தால், நான் எனது 70-வது வயதில் 35-வயதுடையவனைப்போல் காணப்பட்டிருப்பேன்."



'மனிதன் எவ்வளவு நாட்களுக்கு இயற்கையாக உயிர் வாழமுடியும் என்பதைப்பற்றி விஞ்ஞான சாஸ்திரிகள் பல மதிப்புகளை ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். அதன்படி 120, 200-வயது வரையிலும் உயிர்வாழலாமென்று முடிவு கூறியிருக்கின்றனர். நாய் இரண்டு வருடங்களில் பூரண வளர்ச்சியடையும். இந்த இரண்டை ஆறால் பெருக்குங்கள்.

12-வருடங்களே நாயின் இயற்கையான ஆயுள்.

"11-வது வருடத்தில் நாய் ஒன்று இரண்டாவது வயதில் எப்படி இருந்ததோ அது மாதிரியே இருக்கும். ஆனால் 12-வது வருஷத்தில் அது திடீரென்று மாண்டுவிடும்.

மனிதன் பூரண வளர்ச்சியடைய 20-ஆண்டுகளாகின்றன. இதை ஆறால் பெருக்கினால் 120-ஆகும். ஆகவே விதிப்படி மனிதனுக்கு இயற்கையான ஆயுள் 120-வருடங்களாகும். 115, 118-வது வயதில் அவன் 25, 30-வது வயதில் எப்படி இருந்தானோ அந்தமாதிரி இருக்கவேண்டும்.

"ஆனால் அதற்கு மாறாக அவனது பற்கள் இளமையிலேயே விழுந்துவிடுகின்றன. மயிர்கள் உதிர்ந்து விடுகின்றன. கண்கள் பஞ்சடைகின்றன. இவ்வளவும் அவனுக்கு 45-வது வயதிலேயே நேர்ந்துவிடுகிறது. சமஸ்கிருத நூற்களில் மனிதனுக்கு 120-வயதுதான் இயற்கையான வயது என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மேற்குத் தேச ஆராய்ச்சியின் முடிவும் இதுவேயாகும்.

### கடல் ஜலம்

மனித சரீரத்தைக் காப்பாற்றும் சத்துப்பொருட்கள் யாவும் கடலில் கலந்திருக்கிறது. கடற்பாசி என்று சொல்லப்படும் தாவரம் கடலில் வளர்கிறது. மனிதனது வளர்ச்சிக்குவேண்டிய எல்லாப்பொருள்களையும் கடற்பாசி பெற்றிருக்கிறது.

"சில தேசத்தினர்கள் கடற் பாசியை பல விதங்களில் உபயோகப்படுத்துகின்றனர். ஜப்பானியர்கள் கடற்பாசியை தங்கள் ஆகாரத்தில் சேர்த்துக்கொள்கின்றனர். கடற்கரையையடுத்த சில பிரதேசங்களின் குடியானவர்கள் தங்கள் நிலங்களுக்கு கடற்பாசியை உரமாக உபயோகிக்கின்றனர். அந்த நிலத்தில் விளையும் பழங்களும், காய்கறிகளும் ஏனையவிடங்களின் விளை பொருள்களைவிட சத்து நிறைந்து காணப்படுகின்றன.

ஹிந்து சாஸ்திரங்களிலுள்ள தத்துவங்களை" கற்றுக் கொள்ளும்பொருட்டே நான் இந்தியாவுக்குவந்திருக்கிறேன். மக்களை இளமையடையச் செய்வதைப்பற்றி சில முக்கியமான விஷயங்கள் அவைகளில் அடங்கியிருப்பதாக நான் நம்புகிறேன். நான் அநேக சந்நியாசிகளைச் சந்தித்தேன். அவர்களால் எனக்கு பூராவும் விளக்கமுடியவில்லை. தத்துவங்கள் தெரிந்த சிலரை நான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

"நான் கடற்பாசியைத் தின்றே உயிர் வாழவில்லை. அதை மட்டும் தின்று ஒருவர் உயிர் வாழ முடியுமா என்பதும் எனக்குத் தெரியாது. சாதாரண ஆகாரமே நான் சாப்பிடுகிறேன். ஆனால் அதில் கடற்பாசியையும் நான் சேர்த்துக்கொள்கிறேன். "கடற்கரையைச் சேர்ந்த இடங்களிலெல்லாம் கடற்பாசியை சுலபத்தில் சேகரிக்கமுடியும். சில கடற்பாசிகள் நன்றாயிருக்கின்றன. சில கெட்டுப்போயிருக்கின்றன.

"ஜப்பானியர்கள் கடற்பாசியை பொதுவாக சமையல் செய்து சாப்பிடுகின்றனர். சிலவேளைகளில் பச்சையாகவும் சாப்பிடுகின்றனர். கடற்பாசியை பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் அதை உலர வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது அது நெடுநாளைக்கு உபயோகத்திற்கு வரும்".

(தினமணி)



# THE ROSE.

## ரோஜா.

(டாக்டர் வாட்ஸ்.)

சித்திரை வைகாசிக்கோர் சிறப்பளித் திலங்கும் ரோஜா
எத்துணை நேர்த்தியான இம்மலர் எழில்தான் என்ன!
இத்தகைத் தெனும் முகூர்த்தத் திதழ்வளம் குறைந்துவாடி
நத்திய நிறமும் கெட்டோர் நாட்பொழு தினிலே பொன்றும்.

ஆயினும் இப்பூவிற்கிவ் அவனியில் உள்ள ஏனை
ஆயபன் மலர்க்கும் இல்லா அருங்குணம் உண்டே தென்னில்
ஏபதன் இதழ்கள்வாடி எழில்நிறம் எல்லாம் கெட்டு
மாயினும் இனிமையான மணமது வீசாநிற்கும்.

இளமையும் மக்கள் தம்மின் எழிலும்இம் மலரைப் போன்று
வளமையும் வனப்பும் வாய்ந்தும் வரவர வாட்டங் கண்டு
தளர்வுறும்; தளர்வுறாமல் தடுத்தவை ஓம்பல் வீணே
மளமளவெனச் செல்காலன் மாத்திரைப் போதில் மாய்க்கும்.

ஆதலின் இளமை தேசென் றுய்இவ் விரண்டும் பற்றித்
தீதுறு செருக்கே கொள்ளேல்; தேய்ந்தவை வாடிச்சாமால்
ஓதுநம் டென் நன்றுற்றி ஓங்குநற் புகழே எய்தின்
ஈதுரோ ஜாவைப்போல இறப்பினும் மணமே வீசும்.

## தீமை.

(போப்)

மலையின்உச் சியின்மீ தூற்ற மாப்பெரும் உருளைக் கல்லை
உலைவுற ஆரம் பத்தில் உந்திஓர் சேயும் தள்ளும்
நிலைவலி அரக்கன் றானும் நேர்ந்திடை நிறுத்தொ ணாதிச்
சிலையினைப் போன்ற தேதான் தீமையும் என்பர் மேலோர்.

# எதிர்வெடிகள்.

(அடிமை)

ஆப்பிரிக்காவில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யும் இந்தியரை ஓர் வித தனி வியாதி பாதித்திருப்பதாகத் தெரிகிறது. (ஸி. எப். ஆண்ட்ரூஸ்.)

அதற்குப்பெயர் "நிறத்திமிர்" என்று கேள்வி.

---

வாதிகளும் வைத்தியர்களும் இனி ஜெயம்பெற்று விடுவார்கள். (ஓர் விளம்பரம்.)

பிரதிவாதிகளும் நோயாளிகளும் அந்தரந்தானா?

---

இன்றைய அரசியல் நிலை வேடிக்கையானது. (ஸ்ரீ சங்கராச்சாரியார்.)

அதுதான் வேடிக்கை பார்க்கிறீர்கள் போலும்.

---

ஸ்ரீ காந்தி தன் மகனுக்கு ஓர் பிராமணப்பெண்ணை மணமுடித்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும். (கோகுலநாத்ஜி சுவாமியார்.)

ஆனால் பறைப்பெண்ணை செய்திருக்கவேண்டுமென்று கூறுகிறீர்களா?

---

இந்தியாவிலுள்ள ஏராளமான ஏழைகளை ஒரு சில பணக்காரர்கள் கையில் ஒப்படைப்பதை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. (மெஜர் அட்லி.)

சந்தோஷம். அப்படியானால் அச்சில பணக்காரர்களை அவ்வேழைகளிடம் ஒப்புவிக்கலாமா?

---

இது விஞ்ஞான சாஸ்திர காலமாகத் தானிருக்கிறது. (ஒரு பத்திராதிபர்.)

ஆனால் எங்களுக்கு அஞ்ஞான சாஸ்திர காலமாகத்



நானும் ஜெனரல் ஸ்மட்சும் நேசபாவத்துடனிருப்பது நிச்சயம். (காந்திஜீ.)

யாரிடத்தில் தான் தங்களுக்கு நேசமில்லை?

---

பரிசு வேண்டுமா? அதிக குழந்தைகளைப் பெறுங்கள். (ரோம் அறிக்கை.)

இதைக்கேட்ட நம் நாட்டு விதவைகள் அங்கே குடியேறப்போவதாக வதந்தி.

---

அழகுக்கழகு செய்வது தலை மயிரே. (ஓர் விளம்பரம்)

இப்படிச்சொன்னால் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், சாயபுகளும், அம்மாமிகளும் மயிர் வளர்த்துவருவார்கள் என்ற எண்ணமா?

---

வித்வான்கள் சபையில் பாடும்போது அருவருப்புத் தரத்தக்க விதமாய்க் கைகால்களை ஆட்டும் பழக்கத்தை விட்டுவிடவேண்டும். (ஒரு பிரசங்கம்.)

அடடா! அதில்லாவிட்டால் அவ்வளவு சுகப்படாதே. தாங்கள் வேண்டுமானால் கண்ணை மூடிக்கொள்ளுங்கள்.

---

தமிழ் ரசாயன சாஸ்திரம்; தொட்டதெல்லாம் பழுக்கும் முறை. (ஓர் விளம்பரம்)

அப்படியானால் பழமார்க்கட்டொன்று ஏற்படுத்தலாமா?

---

ராஜயோகத்தில் பலவகையுண்டு. (ஓர் யோகி.)

வாஸ்தவமே; தனிகைப்பிரசாதராஜயோகம், குதிரைப்பந்தய ராஜயோகம், வட்டமேஜை ராஜயோகம், சட்டசபை ராஜயோகம், நைட், கான்பகதூர் ராஜயோகம் முதலியன ஆகும்.

---

த்வைதத்தைப்பற்றி இங்கிலீஷில் பிரசங்கம் நடந்தது (ஓர் செய்தி.)

அந்தோ! மதவிஷயத்தில் நீச பாஷை எப்படி நுழையலாம்?

# ஆரம்ப ஆசிரியர் குறைகள்.

23—2—35-ல் பாபநாசம் தாலூகா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு பசுபதி கோவிலில் ஸ்ரீமான் எ. மெத்துசலா அவர்கள் தலைமையில் நடந்தது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

1907-ம் ௵ முதல் கல்வி விதிகள் 11-ம் அத்தியாயம் 139-விதியின்படி 1907-முதல் 14-வரையில் லோயர் ஹையர் என்ற வித்தியாசம் இல்லாமல் பயின்று எலிமெண்டரி கிரேடு என்று பொதுவான சர்டிபிகேட்டு பெற்றவர்கள் எல்லோரையும் ஹையர் கிரேடாகவே பாவிக்க வேண்டியதற்குப் போதுமான ஆதாரங்களிருப்பதனால் அவர்கள் 8-வது வகுப்பு பாஸ் பண்ணாவிட்டாலும் G. O. 1581, 4–9–32-ந்தேதி உத்தரவில் கண்ட பரீக்ஷையை ஹையர் கிரேடு ஆசிரியர்களோடு எல்லாப் பாடத்திலும் ஒருவிதமான பரீக்ஷா வினாக்களுக்கு விடையளித்து ஏற்கனவே தேறியவர்களாய் இருப்பதுபற்றி அவர்களை ௸ உத்தரவினின்றும் விலக்குசெய்து மறுபடியும் பரீக்ஷைக்குப் போகாமலே அன்னாரின் சர்ட்டிபிகேட்டுகளை ஹையர் கிரேடுகளாய் மாற்றிக்கொடுக்கும்படி காருண்ய கவர்ன்மெண்டாரை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

1920-ல் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்ட சம்பள கமிட்டியார் ஆரம்ப ஆசிரியர்களுக்கு எலிமெண்டரி லோயருக்கு ரூ. 20–1–30, எலிமெண்டரி ஹையருக்கு ரூ. 25–1–45, செகண்டரிக்கு ரூ. 35–1½–50–60 என்று சம்பள திட்டம் அரசாங்கத்தார் நேர் பார்வையிலிருக்கும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அவ்வண்ணமேயளித்து வருகிறார்கள். சமீபத்தில் வெளியான G. O. பிரகாரம்



அடியிற்கண்ட கவர்ன்மெண்டு ஸ்கேல்படி லோயருக்கு ரூ. 15–½–20, ஹையருக்கு ரூ. 20–½–24/2–30, செகண்டரிக்கு ரூ. 25–2/2–45 என்று சம்பளத்திட்டம் வகுத்திருக்கிறார்கள். இந்த திட்டமானது ஆசிரியர்களுக்கு சற்றும் போதாததாகும். அவர்கள் தங்கள் வாழ்க்கையை சுமாராகவாவது நடத்த முதலில் கண்ட திட்டத்தையே அமுலுக்குக்கொண்டுவர வேணுமாய் இம்மகாநாடு கவர்ன்மெண்டாரைப் பெரிதும் கேட்டுக்கொள்ளுகிறது.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதுத்திட்டமில்லாமல் சர்க்காரால் சர்க்கார் பள்ளிக்கூட ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் திட்டத்தையே கொடுக்கவேண்டுமென்றும், அப்படிக்கொடுக்கும் வரையில் இப்பொழுது அரசாங்கத்தாரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பள திட்டத்திற்கு மேல் எந்த கிரேடு உபாத்தியாயராவது அதிகம் பெற்றிருந்தால் அவ்வாறு பெற்ற அதிகத்தொகையை பெர்ஸனல் அலவன்ஸாகக் கருதவேண்டுமென்றும் ஜில்லாபோர்டாரையும், சர்க்காரையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.''

“ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளை அவ்வப்போது நிவர்த்திப்பதற்காக ஆசிரியர்களின் பிரதிநிதியாகஒருவரை ஜில்லாபோர்டு மெம்பராகவும், மாகாண பிரதிநிதியாக ஒருவரை எம். எல் ஸி. மெம்பராக நியமிக்கும்படி இம்மகாநாடு காருண்ய கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கெள்ளுகிறது.

“எல்லா ஆரம்பஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கும் ஹைஸ்கூல் வரையில் இனமாக கல்வியளிக்கப்பட வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்குமாறு காருண்ய கவர்ன்மெண்டாரையும், ஸ்தலஸ்தாபன அதிகாரிகளையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.'' (சுதேசமித்திரன்.)

# மருந்து செய்பகுதி.

## கஷாய வகைகள்.

1. சாதாரணக் காய்ச்சல் நீங்க:—

மிளகு, வாய்விளங்கம், சுக்கு வகைக்குக் கால் ரூபாய் எடை எடுத்து சட்டியில் போட்டு கால்படி தண்ணீர் விட்டு வீசம்படியாக வற்றவைத்துச் சாப்பிடவும்.

2. முறைக்காய்ச்சல் அல்லது விஷ சுரம் நீங்க:—

(a) தும்பை வேர், பெருவாகை இவ்விரண்டையும் சமனெடை சேர்த்து கால்படி தண்ணீர் விட்டு வீசம்படியாக வற்றவைத்து அதில் கொஞ்சம் மிளகுப்பொடி சேர்த்து சாப்பிடவும்.

(b) சங்கங்குப்பி இலை ஒன்றரை ரூபாயெடை எடுத்து அரைப்படி தண்ணீர் விட்டு வீசம்படியாக்கி சாப்பிடவும்.

3. குளிர்காய்ச்சல், நாட்பட்ட சுரம் நீங்க:—

ஆடாதோடை, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, பற்பாடகம், சீரகம், பேய்ப்புடல், சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளை வகைக்கு அரை ரூபாயெடை எடுத்து மண் பாத்திரத்திலிட்டு, ஒரு படி தண்ணீர் விட்டு கால் படியாக வற்ற வைத்து சாப்பிடவும்.

அளவு:— வேளைக்கு வீசம்படியாக காலைமாலையாக நாள் ஒன்றுக்கு இரு வேளை வீதம் உட்கொள்ளவும்.

பத்தியம்:— புளி நீக்கவும்.

ஆகாரம்:— அரிசி அல்லது ஜவ்வரிசிக்கஞ்சி சாப்பிட வேண்டும்.

குறிப்பு:— ஒவ்வொரு நாளும் புதிய கஷாயம் போட்டுக்கொள்ளவேண்டும்.



16–2–35-ல் நடைபெற்ற கோவிற்பட்டி
பத்திவிளைக்கழகம்
25-ம் ஆண்டு நிறைவு விழாவில்
சென்னைமாகாண சித்தவைத்திய சங்க அமைச்சர்
திரு. V. சிவஞானயோகிகள்
நிகழ்த்திய பெருஞ்சொல்

# குருமருந்து.

சித்தர்கள் கையாண்டு தங்களுக்கும் உலகுக்கும் பயன்றரச்செய்த மருத்துவநூல் இதற்கு முதலாசிரியர் சிவனார். அவர்பாற் கேட்டவர் நந்தி. அவர் மாணாக்கன் சனகர், சனந்தனர், சனந்தனர், சனற்குமாரர், சிவயோகமுனி, பாம்புக்காலர், புலிக்காலர், திருமூலர் என்றெண்மர்.

திருமூலர் மாணாக்கர் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி, கஞ்சமலைச்சித்தர் என எழுவர்.

சித்த நூலாசிரியர் நந்தி, அகத்தியர் முதலியர் பதினெண் பெயர். அவர் பரம்பரைவந்த சித்தர் பலநூற்றுக்கணக்கினர் உளர்.

அவர்கள் கூறிய மருந்து கற்பம், யோகம், சித்து, ஞானம் பற்றியன. இவ்வனைத்துக்கும் மூலமாயுள்ளது மூப்பு மருந்து, காப்பு, நீக்கம் நிறைப்பு என்பன. அவை, நோய் வாராமற் காப்பதும், வந்த நோய்களைப் போக்குவதும் உடலிற் குறைந்த சத்துகளை உண்டாக்கி வலுப்படுத்துவதும் ஆம்.

கற்பம்:- உடலை வலுப்படுத்தி நீண்ட ஆயுளைத்தரும் மருந்துகள்; அதாவது வேண்டிய சத்துகளைக்கற்பிப்பது.

யோகம்:- உயிர்ப்பை வயப்படுத்தி மனத்தை நிலைக்கச் செய்யும் முயற்சி—ஒகம்.

சித்து:- செய்தரிய செயல்கள் செயல்.

ஞானம்:- பசு பதி பாசங்களின் உண்மை அறிந்து பாச மொழித்து பதியையறிந்தடைதல்.

இவ்வனைத்துக்கும் மூலமாயுள்ள முப்புவை அறிந்து முடித்து கற்பம் புரிந்துண்டு யோகமியற்றி ஞானமடைதல் முறை.

## ஞானக்கும்மி.

கோவானூருக் குளத்துக்குள்ளே
கருங் குன்றிமணி யம்மன் கோவிலிலே
சாவா மூலி முளைத்திருக்கு தனைச்
சார்ந்து பாரடி ஞானப்பெண்ணே.

அதாவது பூநீறு ஆயுளை வளர்க்கும் மூலிகையென்று விளக்கியுளது. பூநீறு பிரமகற்பமுண்டாக்குவதற்கு மூலமானது. அதற்குப் பிரமகற்ப உப்பு என்றும் பேர். எல்லாக்கார சாரங்களும், பாடாணங்களும் நூற்றிருபதுவகை உபரசச் சத்துகளும், இரும்பு முதலிய 9-வகை பொன்களும், ஒளிர்கின்ற உடுக்களும், மலைகள், பூமி, மூலிகைகள், கருமானங்கள் முதலியவனைத்தும் உண்டாதற்கு மூல காரணமாய் உள்ளது.

அந்த முப்புச்சுன்னம் சூதத்தைக் கட்டும் துருசை நீற்றும், தங்கத்தை சூதமாக்கும், நிமிளையிற் சத்தெடுத்துப் பொன்னாக்கும். கதிரவன்போல் மக்களுடல் ஒளிர்க்காய சித்தி செய்யும். மனிதருக்கேற்படும் அவமிருத்துகளைப் போக்கும் 64-வகைப் பாடாணங்களையும் சுன்னமாக்கும். நூற்றிருபது சத்துக்களையும் சுன்னமாக்கும். எல்லா உலோகங்களின் களிம்பைப்போக்கித் தங்கமாக்கும். இதுவே தென்முகக்கடவுள் சனகன் முதலியவர்க்குச் சொல்லியருளிய சுன்னம். பதினெண்சித்தர் எல்லா சித்திகளையும் ஆடும் சுன்னம், மேல் மூலம் 12-வது நிலையைக்கடந்து பிரமநிலையை அடையச்செய்யும் சுன்னம் கீழ்மூலத்தில் குண்டலி நிலையில் நி[illegible]த்தும் சுன்னம் பிறவிக்கடலைக்கடந்து பிரமத்திலிரண்[illegible] கலந்து நிற்கப்புரியுஞ்சுன்னம் என்று முப்புச்[illegible] பெ[illegible]



முற்காலத்தில் தமிழ்நாட்டில் சித்துநூல்களில் வல்லவராய் அனுபவம்பெற்ற பலர் சித்தராய் நீண்ட ஆயுள்பெற்று வாழ்ந்தனர். இம்மண்ணுலகிற் காயசித்தி பெற்றவர் கயிலாயமலை (Mount Everest) முதலிய பல உயர்ந்த மலைகளுக்குச்சென்று அங்கு தவம்புரிந்து மேலுலகங்களுக்குச் சென்று சோதிவடிவினராய்ப் பேரின்பெய்தி வாழ்கின்றனர்.

## முப்புச்சுன்னப் பெருமை.

முப்புச்சுன்னம் கடுகிற் காற்பங்கு, சூதம் சேர் ஒன்றிற்றாவினால் கட்டிப்போம். அதை குன்றளவு சூதத்திற் போடப்பொன்னாம். முப்புச் சுன்னம் வெந்தயவளவெடுத்துப்பாலிற்போட பால் உணர்ந்துபோம். அதை மூன்று தினந்தின்னால் உடல் கதிரவன்போல வொளிவிடும், காயசித்தியும் யோகசித்தியுமுண்டாகும். ஊழிகாலம் சூதம் உண்டு இறப்பின்றி இருக்கலாம். இவ்வுலகமும் பிற உலகங்களும் போற்றப்பெற்றிருக்கலாம், சித்தர்களுடன் பேசிக் களிக்கலாம் 1008-அண்டங்களை சிறுபொழுதிற் சுற்றிவந்து நிலைத்திருக்கலாம். சித்தர் பெருமை எல்லாம் முப்புச் சுன்னத்தின் பெருமையே.

முப்புவால் செய்யப்படும் சூதமணி அவை சகட்டுக் குளிகை, கெவனக்குளிகை, யோக குளிகை, சந்தான குளிகை, வண்சித்துக் குளிகை, கமல குளிகை, சொரூப குளிகைகளாம்.

சகட்டுக்குளிகை, அதிவிரைவில் மண்ணிற் செல்வது. கெவனக்குளிகை, அதிவிரைவில் விண்ணிற் செல்லும் வலிமையுடையது.

முக்கிய மருந்து மூலிகைச்சரக்குகள் 1008. மாமூலிகைகள், கருநெல்லி, சோதிமரம், செந்தாடுபாவை, சுணங்கமரம் முதலியன 64. பாடாண வகை 64. உபரசச்சரக்குகள் 120. சத்துகள் 112. கற்பவகை 108. உலோகவகை 9.

இம்மண்ணுலகிற் பற்பல நாடுகளில் பற்பல மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மேற்கூறிய சித்திகள் தரும் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டில்லை. தமிழுலகில் சித்தர்களாற் கண்டுபிடிக்கப்பட்டு அனுபவத்தில் இருந்ததாய் நூல்களால் வெளிப்படுகின்றது.

சித்தர் தாம் பல அண்டங்களைச் சுற்றிவந்ததாய்க் கூறுகின்றனர். திருமூலர்

இருந்தேனிக் காயத்தெண்ணிலி கோடி
இருந்தே னிராப்பகலற்ற விடத்தே
இருந்தே னிமையவ ரேத்தும் பதத்தே
இருந்தே னென்னந்தியிணை யடிக்கீழே

என்று எண்ணிலி கோடிகாலம் இக்காயத்தோடிருந்ததாய்க் கூறுகின்றனர். காசியில் கணபதி சாமிகள் நானூறு வயதுக்குமேல் இருந்து மறைந்தார். நாரதமலைச்சாமிகள் இப்பொழுது 250-க்கு மேற்பட்ட வயதினராயிருக்கின்றனர். தியாகராஜ யோகிகள் யோகசித்தி பெற்றிருக்கின்றன. அவர்கள் குருபரகாயப்பிரவேச சித்தியுடையாராய் இருக்கின்றனர். இப்படிப் பலருளர்.

இனி சித்த வைத்திய மருந்துகள் ஆலோபதி முதலிய மருந்துகளிற்றீராத சூலை, வாதம், சன்னி, இருமல், குன்மம், ஒருத்தலைவலி, முதலிய நோய்கள் சில நாளில் குணப்படுத்துவதை நேரிற் காண்கின்றோம்.

தமிழ் சித்த மருந்துகள் 12000-ஆண்டுகட்கு முந்திய காலந்தொட்டே தமிழ்நாட்டில் அனுபவத்திலிருக்கின்றன. ஆயினும் வியாபாரிகளின் முயற்சியாலும், பல உதவியாலும் ஆலோபாதி வைத்தியம் பெருகிவருகின்றன. சித்த வைத்தியம் தேய்ந்துவருகின்றன. பெரும்பாலும் சித்த வைத்தியருக்கு தமிழ்ச் சித்த நூற்பயிற்சிக்குரிய பாடசாலைகளும் மருந்துகளைச்செய்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சிசாலையும் ஆசிரியருமில்லாமையால் முப்புவின் பெருமை தெரியாமற் போகிறது.



ஆதலால் தமிழ்ச் சித்த நூல்களைப் படிக்கப் பாடசாலைகள் ஏற்படுத்தி சித்த முறைகள் அருகிப்போகாமல் வளர்க்க நம் நாட்டுக் கல்விமான்களும் செல்வர்களும் வேண்டும் முயற்சி செய்யவேண்டும்.

நோய் வராமற்காக்கும் மருந்துகளை அருந்தி சுகதேகிகளாய் வாழவும் வந்த நோய்களைச் சித்த மருந்துகளால் முற்றுங்குணமடையச் செய்யவும் ஆயுளை வளர்க்கச் செய்யும் மருந்துகளை அருந்தி நலம் பெறவும் முயலவேண்டும்.

சித்த மருந்தில் ஒரு சிறு மருந்தைச் சிறிதுகாலம் உண்டதால் 91-வயதாயும் நோயின்றிச் சுகசரீரியாய் இருக்கின்றேன். 30-வயதில் கற்பமருந்துகள் சாப்பிடக் கிடைத்து ஒழுங்காய் உட்கொண்டு யோகமியற்றினால் பூரண பலன் கிடைக்கும். 60-வயதிற்குமேல் கற்பம் கொள்ளல் முழுப்பயன் தராது. இத்தகை நலத்தை அனைவருமடைய வேண்டும். சித்தர் முப்பு முறையில் சிறிதாவது தெரிந்த சித்த வைத்தியர் ஆயிரத்திலொருவர் கிடைப்பதரிதாயிருக்கிறது. இவ்வாறு அருகி மறைந்துவிடாமல் இருக்கச்செய்ய அடியிற்கண்ட தீர்மானத்தைக் கொண்டுவருகிறேன்.

## தீர்மானம்.

தமிழ்ச் சித்த வைத்தியம் உலகிலுள்ள எல்லா நாட்டு வைத்தியங்களிலும் சிறந்த மருந்துகளுடையது. பிறநாட்டு மருந்துகளிற்றீராத நாட்பட்ட கொடிய நோய்களைத் தீர்ப்பனவும் ஆயுளை வளர்ப்பனவுமாய் இருக்கின்றன. ஆதலால் காருண்ய கவர்ன்மெண்டார் சித்த வைத்திய நூலாராய்ச்சிக்கழகமொன்றமைக்கவும், சித்த வைத்திய மருந்துகளைச் செய்துபயோகிக்க துணை புரியவும் இச்சங்கம் வேண்டிக் கொள்ளுகிறது.

இது ஷை யோகிகளால் கொண்டுவரப்பட்டு சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க அமைச்சர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆதரிக்க சபையாரனைவரும் ஒருமனதாய் வேண்ட நிறைவேறியது.

# சித்த வைத்தியம்.

(K. சபாபதி பிள்ளை, வைத்தியர், பழனி.)

சித்த வைத்தியமே சிறந்த வைத்தியம். அதுவே மற்ற வைத்திய முறைகளுக்கெல்லாம் ஊற்றாயிருந்ததென்றும் ஆதிகாலந்தொட்டு மாறுதலடையாதிருக்கின்றனவென்றும் பல பெரியாரின் ஆராய்ச்சியின் பயனால் தெரிய வருகின்றது.

சகல சாஸ்திரங்களிலும் மேன்மையுடையது வைத்திய சாஸ்திரம் ஒன்றே என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம் எங்ஙனமெனில் மனிதற்கு உடல்நலத்தையளித்து உயிரைக் காப்பாற்றக்கூடிய வழி வகையை அறிவிப்பது இதுவாகும். வைத்திய சாஸ்திரமானது சித்தர்களால் வெளியிடப்பட்டதாதலால் இந்நாளுக்கு சித்தர் நூலெனவும் இம்முறைக்கு சித்தர் முறையெனவும் வழங்கலாயிற்று.

உலகிலேயே நம்நாடு அறிவிலும் கலையிலும் வைத்தியத்திலும் தலை சிறந்து விளங்கியது எனத்துணிந்து கூறலாம். தமிழ் வைத்திய நூற்கள் பல கிளை (அங்கம்) களை தனது உருவாக்கி நிற்கிறது, அதாவது ஒரு ‘வைத்தியன்’ என்றால் “ஜீவரக்ஷகன்” உயிர்களைக் காப்பாற்றுகிறவன், தாயினுந் தந்தையினும் மேன்மையுடையவன் என்று கூறலாம். இதனால் அவன் சகலவிஷயங்களையும் ஜீவரக்ஷிப்பிற்கான பல வழிகளைக்கண்டு தெளியவேண்டியது முக்கியமாகும். இதனால் அத்தகையவனை “சித்தன்” என்றும் கூறலாம். இதனைக்கருதிய நமது முற்காலத்திய சித்தர்கள் தங்கள் நூற்களை மிக்கத் தெளிவுடன் இயற்றிவிட்டார்கள். அந்த நூற்களில் மூலிகை, உலோகம், பாஷாணம் முதலிய வைத்திய பாகங்களையும், சோதிடம், பக்ஷி, கலை முதலிய சோதிடக்குறிபாகங்களையும், தெய்வீகம், மாந்திரீகம் முதலியஉச்சாட்டசித்திகளையும் யோகம்,பிராணாயாமம், ஞானம் முதலியவேதாந்த முக்திமார்க்கங்களையும் யந்திர பாகங்களையும் வெகு தெளிவாகக்கூறி இருக்கின்றார்கள்.



‘வைத்தியன்’ இதனை நன்காராய்ந்து தெளிந்து பட்டுப் பழகி வெளிவந்தால் அவனே ‘வைத்தியன்’, ‘சித்தன்’ என்று கூறத்தகும்.

இத்தகயினரே வைத்தியம் செய்யத்தக்கவராவர். நாடோடி, வழிப்போக்கன், சன்னியாசி, குடியன், பித்தன், அவசரபுத்தி உடையவன், படபடப்புள்ளவன் முதலாயினோர்களிடத்தில் வைத்தியம் செய்துகொள்வது தற்கொலை செய்துகொள்வதுபோலாகும்.

வைத்திய அனுபவம், நிதானபுத்தி, கூரிய அறிவு, உண்மை, அன்பு முதலிய குணங்களமைந்த உள்ளோர் வைத்தியர்களிடம் வைத்தியம்செய்துகொள்வதே சிறந்ததாகும்.

திடீர் வைத்தியன், புளுகுவைத்தியன், டாம்பீக வைத்தியன், ஜெகஜ்ஜால வைத்தியன் இவர்களிடத்தில் எக்காலத்தும் வைத்தியம் செய்துகொள்ளக்கூடாது. எனவே ஒரு சித்தவைத்தியன் எப்படி இருக்கவேண்டுமென்பதை நமது சித்தர் நூற்களில் அச்சமறக்காணலாம்.

இனி நமக்கு வேண்டிய மூலிகைகளைப்பற்றி சிறிது ஆராய்வோம். ஏனெனில் நமது சித்தபுருடர்கள் மூலிகையினால் அற்புதங்கள்பலசெய்துகாட்டி மறைந்திருக்கின்றார்கள். அநேக வாத சூக்ஷுமங்களையும் காட்டி இருக்கின்றார்கள். முப்புவினால் ஆகாத பலவற்றை மூலிகையினால் முடித்து வெற்றியடையலாமெனவே இந்தமார்க்கத்தில் சிறிது நுழைவது நமக்கு மேன்மையாகும்.

### சித்த மூலிகை ரகசியம் நெ-ர்-1.

“குப்பையிலே பிறந்த கீரை
குருமுறையா லறிந்த கீரை
வாதிமகன் தொட்ட கீரை
வைத்தியனுக் கேற்ற கீரை
பச்சைப்பசேலென்ற பருப்புக் கீரை
பார்த்தவுடன் பழுத்துவிடுந் தங்கக்கீரை
வாயிலே அடக்குங் கீரை

வானமணி பார்க்குங் கீரை
பறையருக்கும் பார்ப்பருக்குமான கீரை
பாலகுரு சித்தன்சொல் பச்சைக்கீரை''.

நமது சித்தர்கள் அதி நுட்பமாகவும் சூக்ஷமமாகவும் பரிபாஷையாகச் சொல்லிய மேற்கண்ட கீரைப்பாட்டை கவனித்தால் அது சாதாரணமான ஒரு கொல்லைக் கீரையாகவிருக்கலாம், அது ஜனங்கள் வாயிலடக்குங் கீரையாக இருக்கலாம், அதனால் நாம் செய்யக்கூடிய விஷயங்கள் ஆச்சரியப்படத்தக்க அற்புத வேலைகளாக இருக்கும். விளையாட்டாக நமது சித்தர்கள் அநேகம் பாடல்களைச் சொல்லி இருக்கிறார்கள், அதின் கருத்துக்கள் அருமை பெருமையுடையதாகும்.

குறிப்பு:—

ஷை கீரைப்பாட்டிற்கு எமக்குத் தெரிந்தவரையில் சில அநுபவங்களைக்கொண்டு ஷை மூலிகையை விளக்கி வருகிறேன். பெரியோர்கள் அநுபவசாலிகள் தங்கள் கருத்தையும் இப்பத்திரிகை மூலமாக வெளியிட்டால் உலகோபகாரமாக இருக்கும்

''பாலகுரு, சித்தன் சொல் பச்சைக்கீரை''

என்றால் குழந்தைகளின் வியாதியை நீக்கக்கூடிய ஒரு மூலிகை என்றார். ஆனால் அது ''பச்சைக்கீரை'' என்று முடிக்கிறார். குழந்தைகளுக்கு குருவாகவுள்ள ஒரு பச்சிலையை குறிப்பிடுகிறார்.

''பறையருக்கும் பார்பாருக்குமான கீரை''

இது எவ்வித தோஷங்களுடையதென்று சொல்லக்கூடியதல்ல, சமத்துவமான ஒரு கீரை என்றார்

''வாதி மகன் தோட்ட கீரை''

நவலோகங்களையும், பசும் பொன்னுக்கும் ஒரு வல்லவனுடைய மகன், முதன் முதலில் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு மூலிகை என்றார். வாதிமகன், ''ரஸத்தை''க் கட்டும் ஆரம்பவேலைக்கு முயற்சிக்கிறான். அப்படியானால் ரசத்தை கெட்டியாக்கிவிடும் தன்மையுள்ள ஒரு பசு மூலிகை எனலாம்.



# அகத்தியர்
# குணவாகடம் 3000.

(சாமி, விருதை, சிவஞான யோகிகள்.)

(56-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏழான குட்டமது பதினெட் டாகும்
யெழும்பிவரும் கிருமியுள்ள ரோக மேழாம்
பாழான மகாவாத ரோக மெட்டு
பரிசுத்த சுரோணிதத்தின் ரோக மெட்டு
ஆழான ஆவிர்தநோ யிருபத்தி ரண்டாம்
அடைவான விடபாக ரோகமெட்டே
ஊழாலே மலட்டுரோ கங்க ளேழாம்
உண்டான பிரசவத்தின் ரோகம் பத்தே. (7)

## குழந்தை நோய்.

பத்தான பாலருக்குப் பிறந்த நோய்கள்
பாரிலுள்ளோர் தானறியப் பகரக் கேளாய்
முத்தான சூலைகணை கிரந்தி நோய்கள்
முடிவிலவை ஒவ்வொன்றும் பதினெட் டாகும்
சித்தான மாந்தமுடன் சுரமுந் தோடம்
சிறப்புடனே ஒவ்வொன்றும் இருப தாகும்
எத்தாலே வந்ததென்று கேட்பா யாகில்
இளமாதர் முலைப்பாலால் விளைந்த நோயே. (8)

நோயான கழிச்சலொடு கரப்பான் றானும்
நோக்கமுடன் வகையொன்று பதினா றாகும்
வாயான அட்சரந்தான் ஒன்ப தாகும்
வரிசையுடன் சன்னியது மாற தாகும்
மாயாத அமரமுடன் நோய்கள் தானும்
மார்க்கமுள்ள கடுவானும் கக்கு வானும்
காயாம லழுமிளம் பிள்ளை வாதம்
காமாலை செவ்வாய்ப்புண் கட்டி யெட்டே. (9)

வேறு.

எட்டு மிரண்டுமிழி பக்ஷி தோடமும்
முட்டு மாதரின் மூன்றுநாள் தோடமும்
சட்ட மாகப் புணர்ந்திடும் தோடமும்
இட்ட மாக விளும்வெகு நோய்களே. (10)

வேறு

பூதகண ரோகமது முப்பத் தாறும்
புகழான உன்மத்த ரோக மாறும்
பேதமில்லா அபச்மார ரோகம் நாலு
பிரிந்தறிவு கெட்டிறந்த கட்டை போலாம்
வேதனைசெய் நேத்திரநோய் தொண்ணூற் றாறு
விளைந்தகுன்ம ரோகமிரு பத்தி நாலு
சேதமிலா வெள்விழிச்சந் திலொன் பதாமே
சிறந்தவெள் ளைவிழியிற் பதின்மூன் றாமே. (11)

ஆமேதான் கருவிழியில் ஏழ தாமே
அப்பனே பார்வையில்தான் இருபத் தேழாம்
காமேதான் கண்ணில்நோய் பதினா றாகும்
கருவான செவியின்நோய் நூற தாமே
நாமேதான் நாசிநோய் பதினெட் டாகும்
நலமான முகத்தில்நோய் எழுபத் தைந்தாம்
போமேதான் தந்தநோ யிருபது மூன்றும்
புகழான நாக்கில்நோய் ஆறதாமே. (12)

ஆறான தாளின்நோய் எட்ட தாகும்
அடைவுடனே கண்டநோய் பதினெட் டாகும்
மாறான சர்வமுக ரோக மெட்டு
மகத்தான சிரரோகம் பத்தே யாகும்
காறான கபாலநோ யொன்ப தாகும்
காசினியில் ரணரோக மறுபத் தைந்தாம்
சீறான கிரந்திரணம் பதினொன் றேதான்
சிறந்ததோ ரானைக்கால் மூன்ற தாமே. (13)



189118

மூன்றான கண்டத்தின் மாலை ரண்டு
முட்டிவரும் அரையாப்பி ரண்டே யாகும்
ஊன்றான துடைவாழை யிரண்ட தாகும்
உள்நாடி ரணபேதம் அஞ்சே யாகும்
பேன்றான வத்திரணம் முப்பத் தாறும்
பித்தவெடி யொன்றுபத ரோக மைந்தே
ஆன்றான வாண்குறியி விருபத்தி ரண்டு
ஆனதோர் பிரமேகம் இருபத் தொன்றே. (14)

ஒன்றான யோனிநோ யிருபத் தொன்று
உத்தமனே விடரோக மறுபத் தேழாம்
மன்றான எலிகடிகள் பதினெட் டாகும்
மாறாத நாய்க்கடிகள் இரண்டே யாகும்
நின்றிடும் நீராம்பல்க் கட்டி யொன்று
நிலையாத கவுசியென் கட்டி யொன்று
சென்றுமே திரிந்தோடும் விப்புருதி யெட்டு
சீரான கெண்டையென் கட்டி யொன்றே. (15)

சுர நிதானம்.

கேளப்பா சுரம்பிறக்கும் வகையே தென்றால்
கெடியான அறுசுவையின் பேதத் தாலும்
தாளப்பா தகாதபல நடக்கை யாலும்
தருவான வாதபித்த சிலேற்ப மென்னும்
மூளப்பா மூன்றுநோ யொன்றாய்க் கூடி
முடியாக விரண்டிரண்டாய்த் தொந்தித் தேதான்
சூளப்பா தனித்தனியே ஆக்ர மித்து
சுகவாமா சயமதனைப் பற்றுந் தானே. (16)

பற்றியக்கு மென்மை கெட்டி வடிவமாகப்
படிந்திருக்கும் சிலேட்டுமத்தின் அடையைத் தானும்
சத்தி தங்கள் வலிமைக்குத் தக்கதாகத்
தகுந்தபடி அவ்வடையை யுப்பச் செய்து

சத்திதரு மன்னத்தை சீர்ணஞ் செய்து
சதிரான சீரணத்தின் நரம்பின் துவாரம்
சுத்திவரும் ரோமத்தின் துவாரந் தன்னை
சுகமாக மறைத்தபின்பு சொல்லக் கேளே. (17)

சொல்லுகிறேன் பக்குவா சயத்தைச் சார்ந்து
சுகமாக வளர்சடா நெருப்புத் தன்னை
மெல்லவே விசிறியே யெழுப்பி விட்டு
மெதுவாக அதனுடனே தானுஞ் சேர்ந்து
வல்லவே சரீரத்தில் பரவிப் பின்பு
வலமாக உடல்முழுதும் கொதிப்பைத் தந்து
அல்லல்செய்து தேகத்தைக் கொடுமை செய்யும்
அழகில்லாச் சுரமதனின் தன்மை தானே. (18)

தானான அக்கினிதான் வீச லாலே
தக்கதொரு ஆகாரஞ் செல்லா தய்யா
ஊனான நரம்பினது துவார முற்றும்
உரவான ரோமத்தின் துவார முற்றும்
தேனாக அடைவதனால் சுரமே யுண்டாய்த்
திரேகத்தில் வியர்வையது காணா தய்யா
மானேகேள் ஆமத்தில் பித்தம் சேத்மம்
வருமாயின் வியர்வையது உண்டாம் பாரே. (19)

பாரேநீ சகலசுரந் தீர வேண்டி
பக்குவங்கள் சொல்லுகிறேன் புரிந்து கேளு
ஊரேதான் உப்பினதோர் சேட்டுமத்தின் தடைகள்
உறுதியாய் முன்போலே சுருங்கு மாகில்
வீரேதான் விசிரினதோ ரக்கினி தானே
விளைவான பக்கு வாசயத்திற் சார
சீரான லங்கணந்தான் முதலிற் செய்து
சிறப்புடனே பின்னாலே அவிழ்தம் பாரே. (20)

(தொடரும்.)



# பழனிஸ்தல வழிகாட்டி.

(கோவை, சி. கு. நாராயணசாமி முதலியார்.)

(44-ம் பக்கத்தொடர்ச்சி.)

## மலைக்குந் தண்டபாணிக்கும் பழனிப்பெயர் வந்த வரலாறு.

முழுமுதற் கடவுளாகிய முருகபிரான் கோயில்கொண்டருள்கின்ற திருமலைகள் அனைத்திலும் கண்ணிற்கினிய காட்சி, கருத்திலுக்கினிய மாண்பு, செப்புதற்கரிய பெருமை, ஒப்புதற்கரிய சிறப்புகள் ஒருங்கே அமைந்த திருமலை திருப்பழனிமலையேயாம். இத்திருமலைமீது பூமிமட்டத்திலிருந்து சுமார் 450-அடி உயரத்தில் தண்டபாணி திருக்கோயில் கொண்டருளுகின்றார். பாரத மக்களால் பணிந்து கொண்டாடும் கலிகாலப் பேசுந்தெய்வங்களில் திருப்பதி வெங்கடேஸ்வரப் பெருமாளினும் சிறப்பாகக் கொண்டாடப்படும் தெய்வம் தண்டபாணியேயாம். தண்டபாணி திருவீற்றிருந்தருளும் சிவகிரியை விடச்சிறிது உயரத்தில் தணிந்திருந்தபோதிலும் இக்கிரியை ஒத்தாய்ப்போல் கீழ்த்திசையில் இடும்பன் மலை (சத்திகிரி) இருக்கிறது. தூரத்திலிருந்து பார்ப்பவர்கட்கு இவை ஓர் காவடியில் இரண்டு பாற்செப்புகள் வைத்திருப்பதுபோல் தோன்றும். இவ்விரண்டு மலைகளிலும் குரங்குகள் மிகுதி. ஆனால் அவைகள் மிகவும் பழகினதாகவும், உற்சாகம் நிறைந்ததாகவும் இருப்பதோடு பிறருக்குத் தீங்கிழைக்காததாகவும் இருக்கின்றன. இம்மலைகளும், மூர்த்தியும், இடும்பனும், திருவாவினன்குடியும், பழமை, பெருமை, கீர்த்தி, அற்புதம் முதலியவற்றால் உயர்ந்ததென்பதற்கு பெருங்கவிவாணராகிய நக்கீரனாரது திருமுருகாற்றுப்படையும், ஸ்ரீ அருணகிரிநாதர் அருள் சுரந்து பாடிய திருப்புகழும், மற்றும் பாடவல்ல பாவலர்

பல்லோரும் மனமுருகிப்பாடிய பாசுரங்களும், பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களுமே போதிய சான்றும்.

இனி, முருகன் பிள்ளைப் பருவத்தில் கயிலாய கிரியில் தந்தை சிவபிரானார் நாரதமுனிவர் தந்த மாதுளங்கனியைத் தனது ஆற்றல் காட்டியும் தனக்கு அளிக்காமல் தமயன் கணபதிக்கு அளித்ததால் பிணங்கிக்கொண்டு, கயிலை நீங்கி திருவாவினன்குடியில் எழுந்தருளியிருக்க, அஃதறிந்த அமலன் ஆவினன்குடியடைந்து, குமரனைக்கண்டு குழந்தாய்! “பழம் நீ” என்று திருவாய்மலர்ந்து கூற குமரன் கோபம் தணிந்து மகிழ்ச்சிகொண்டான் என்பது புராணக்கதை. இதனால் குமரவேளுக்குப் பழம் நீ - ‘பழநி’ என்று பெயராய் அவன் ஆலயங் கொண்டருளும் மலைக்கும் அப்பெயராயிற்று என்ப. அதன் பின்னரே இலக்குமி, காமதேனு, சூரியன், பூமாதேவி, இடி முதலினோர் முருகபிரானை நோற்று இஷ்டசித்திகளை இனிதடைந்தனர் என்பதற்கு வரலாறுமுளது.

பழநி:— கடையெழுவள்ளல்களில் ஒருவனாய் மயிலுக்குப்போர்வை அளித்த வையாவிக் கோப்பெரும் பேகனால் ஆளப்பட்டது.

போதினி என்பது:— சங்க நூல்களில் கண்டது.

திருவாவினன்குடி என்பது:— திருப்புகழில் மிகுதியாகப் பயிலப்பட்டுள்ளது. ஊர் அயலில் அல்லது பழநிமலை அடிவாரத்தில் விளங்குவது திருவாவினன்குடி.

## கடவுளைக்காண்பதுவும், களிப்படைவதுமே மக்களாய்ப் பிறந்தார் செய்கடன்.

---

சிவகிரியின் உச்சியில் ஆலயங்கொண்டருளும் அரிய மாணிக்கச்சோதியைக் கண்பெற்றபேறாகத் தரிசித்து, ஜன்ம சாபல்யம் அடையவேண்டுமானால் மலையின் மீதுள்ள உயர்ந்த



659-கற்படிகளையும் கால் சலிக்கக் கடந்தாகவேண்டும். அங்ஙனம் கடந்து உச்சியையடைந்து, ஆலயத்தைத் திருவலஞ்செய்து மூலஸ்தானத்தை அணுகி, தன்னந்தனியனாய்த் தண்டபாணியாய், நின்ற நிலையில் வெள்ளிய திருநீற்றுப்பூச்சும், உருத்திராக்க வடமும், காவியுடையும், கவின்பெற்றிலங்கச் சேவை சாதிக்கும் திவ்யமங்களத் திருக்கோலத்தை தரிசித்து வணங்கித் தொழுவார் அடையும் இன்பம் இயம்பொணாதது. பின்னர் ஆலயம் நீங்கி, வெளிப்பிராகாரத்தின் ஓர் இடத்திலிருந்து நாற்புறங்களிலும் காணும் காட்சியைக் கவனிப்பவர்கட்கு அவ்வினிய காட்சிகள் நேத்திரானந்தத்தை அளிப்பதுடன் இன்பக்கடலுள் அமிழ்த்தும் ஆற்றல் வாய்ந்னதவுமாம். பின்னும் எல்லாம் வல்ல இறைவனது அபார வல்லமையின் தன்மையையும் இனிது புலப்படுத்தும் ஏற்றமுடையதுமாம்.

குன்றின் சிகரத்தினின்றுங்காணும் நமது கண்களுக்கு பரந்த பூமியினிடத்துப் பொருந்திக் கண்ணுக்கு எட்டிய தூரம் தோன்றும் இயற்கையரசியின் இனிய தோற்றம் நல்விருந்தூட்டியும், மிருதுவான மந்தமாருதம் அந்தமாகத் தவழ்ந்து, தேக சிரமத்தை நீக்கவும் செய்கின்றது. போதாவற்றிற்கு ஆண்டவன் இனிது வீற்றிருந்தருளும் திருக்கோயிலின் கோபுரங்களும், அதன் உச்சியில் விளங்கும் சொர்ன கலசங்களின் பிரகாசமும், நுண்ணிய சிற்பத்திறமையுடன் திகழும் மண்டபங்களும், சிறு கோயில்களும், அவற்றின்கண் சிறந்து தோன்றும் சித்திரத்தூண்களும், எழில் நிறைந்த ஓவியங்களின் அந்தமும், பேரானந்தத்தை தருகின்றது. இவைகளே காட்சியின் இன்ப நிலையங்கள்.

தென்புறத்தினின்றும் காண்பார்க்கு வராக கிரியின் நெடுந்தொடரும், கோடைக்கானல் மலையும், அதனையொட்டிய அஞ்சுநாடும், விருப்பாட்சி மலையும் அம்மலையைச்சார்ந்த

குன்றுகளும், வாலசமுத்திரம், தாமரைக்குளமும்; மேற்கேயிருந்து பார்ப்பவர்கட்கு கலயம்புத்தூர் அக்கிரஹாரமும், ஐவர் மலையும, நெய்க்காரபட்டியும்; வடக்கே நின்று கவனிப்பவர்கட்கு கோதைமங்கலமும், சுயம்பு லிங்கமாக விளங்கும் பெரிய ஆவுடையார் கோயிலும், மானூரும், கீரனூரும்; கிழக்கே நின்று நோக்குவார்க்கு இடும்பன் மலையும், (சத்தி கிரியும்,) ஆய்க்குடியும், கணக்கன்பட்டியும், சத்திரப்பட்டியும் தெளிவாகத் தோன்றும்.

சுருங்கக்கூறின் இது இஞ்சினீயர் இலாகாதார் வரைந்து காட்டும் உலகபடம் (map) போல் அதிசயித்துக் காணும் அந்தமுடையதாம். இங்ஙனம் இன்பக்காட்சிகளை அநுபவித்த ஆன்மாவுக்கு அப்பொழுது புதியதோர் உணர்ச்சி உதயமாகின்றது. அது இவ்வுலகத்தில் மானிடராய்ப் பிறந்து சுகதுக்கத்தை அநுபவித்து ஓய்வின்றிச் சதா உழைத்துவரும் நமக்குச் சில சமயங்களில் இவ்வுழைப்பினின்றும் ஓய்ந்து ஆண்டவனடி பணிந்து, அவனது கிருபாகடாக்ஷத்தைப்பெற அருட்கோலத்தை இனிதாகக்காட்டும் ஆலயத்தைச்சார்ந்து துரியாதீதச் சுடரொளிப் பிழம்பைக் கண்பெற்றபேறுகத் தரிசித்துக் களிப்படையவேண்டுமென்பதே. (தொடரும்.)


"சுசீலா"

சுகந்த வாசனைத் தைலம்.

நூதன முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது கூந்தலை கருமையாகவும், மிருதுவாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும். கண் எரிவு, ரோமம் உதிர்தல், தலையில் உண்டாகும் பொடுகு முதலியவைகளை நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். புட்டி 1-க்கு விலை அணா 10.

கிடைக்குமிடம்:- உடுமலை K. S. ராமநாத அய்யர் ஷண்முகானந்தபவன் ஹோட்டல், பழனி.




# நாடகப்பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(64-ம் பக்கத்தொடர்ச்சி.)

**நாகானந்தன்:—** ஐயா! ஆயின் என் துணிபினையும் கூறுகின்றேன் கேளும். நீவிரல்ல உமக்குப்பக்கத்துணையாய் மும்மூர்த்திகளே வரினும் எதிர்த்துப் போர்தொடுத்து வெல்லும் வல்லமை என் குருவருளால் பெற்றுள்ளேன். உடலின் சிறுமை கண்டு என் வீரத்தினைத் தவறாய் அளவாதீர்கள். பின்னர் நீவிர்தான் இன்னலுக்காளாவீர். 'எண்ணிச்செய்க கருமம் செய்தபின் எண்ணுவது தவறும்' என்பது ஆன்றோர் கூற்று.

**சுகுணன்:—** நிரபராதியாய் தன்கடமைமுடிக்கத்துணிந்துள்ள உன்பால் போர் தொடுப்பதும், உன்னை வெல்வதும் தகாக்கருமம். அது கருதி உன்னுடன் போர் புரியும் அவா ஒழித்தனன். நாமிருவரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறியாதவர். என் பெருமை நீ அறிந்திருப்பயேல் என் பொருட்டு நீ எதுவும் செய்யத் துணியாய் என்பது திண்ணம். ஆயினும் ஒன்று; வெறுங்கை முழம் போடாது. இதோ ஆயிரம் பொன் விலைபெற்ற இரத்தினமிழைத்த இக்கணையாழியை என் பெருமை மன்னரவையில் கெடாதிருத்தல் பொருட்டு உனக்குப்பரிசாயளிக்கின்றேன். இதனைப் பெற்றேனும் என்னை என் வழியேக விடுக.

**நாகானந்தன்:—** ஐயா! தமது வள்ளற்றன்மையை மிகவும் வியந்தேன். ஆயின் நீவிர் கொடுக்கத்துணிந்த பொருளால் பயனென்ன? நீரே இப்பாண்டிய மன்னனாயிருந்து பாண்டியநாடு முற்றுமே எனக்குப் பரிசளிப்பதாயினும் என் கடமையினின்றும் தவறி நடவேன். ஆதலின் நீவிர் தயைகூர்ந்து கொடுத்தது மறுத்ததின் பொருட்டு என்னை மன்னித்து என் பின் வருக. இரவு என் குடிசையில் துயின்று காலை மன்னரவை செல்வோம்.

(சத்தியவிரதன், சத்தியகீர்த்தி பிரவேசம்.)

**சத்தியவிரதன்:—** பாண்டிய நராதிப! அமாத்தியன் சத்தியவிரதன் அடி பணிகின்றேன்.

**சத்தியகீர்த்தி:—** தமிழ்நாட்டு இறைவருள் முதல்வ! அமைச்சன் சத்தியகீர்த்தி நமஸ்கரிக்கின்றேன்.

**சுகுணன்:—** அமைச்சர்காள் நீங்கள் க்ஷேமமே என்னை நாடி வந்தடைந்தது கருதி மிக்க களிகூர்ந்தேன்.

**நாகானந்தன்:—** (தன்னுள்) ஏது இவரை என் இறைவரெனத் தெரிந்துகொள்ளும் ஆற்றலில்லாது போயினேன். யான் புரிந்ததெல்லாம் என் கடமையைக் கடைப்பிடித்தற் பொருட்டே. அதுபற்றி யாது வரிற்றான் என்ன? (சுகுணன் உறைவாளையுருவுதல். வேந்தே தம்மை யான் அறியாக்குறையால் புரிந்த கர்மாவுக்கு என் சிரமே விலையாயின் அதனைக் கொய்துகொள்க. (தலைகுனிதல்.)

**சுகுணன்:—** குழந்தாய்! உன் அஞ்சா நெஞ்சத்திற்கும் கடமைதவறா மனோதிடத்திற்கும் உன் தலையினையா யான் கொய்தல்வேண்டும். இதோ இவ்வாளினை கையிலேந்து. தற்போது காலியாயிருக்கும் என் பிரதம சேனாதிபதி பதவியைப்பெறு. என்னையும் என் இராஜ்ஜியத்தையும் காத்துவா.

**நாகானந்தன்:—** மன்னர்மன்ன! தம்கருணைக்கிணையுமுளதோ? தமது கட்டளையை என் குருநாதர் அனுமதி பெற்று சிரமிசை பூணுகிறேன்.

(யாவரும் மறைதல்.)

---

அங்கம் 2.] [களம் 1.

நாகானந்தன். வீரகேசரி.

இடம்—வைகையாற்றங்கரை.

காலம்—இரவு.

**நாகானந்தன்:—** அன்பரே! இன்று அழகர்சோலையுள் திருக்கோயில் கொண்டருளிய சுந்தரராஜப் பெருமாள், மீனாட்சிக்கும் சுந்தரேஸ்வரருக்கும்நடந்தேறிய திருக்கல்யாணத்திற்குவேண்டிய சீர்வரிசைகளுடன் போந்ததுபோன்றும், அவர் வரவிற்கு முன்னரே திருக்கல்யாணம் நடந்து இருவரும் இரதாரூடராய் நகர் வலம் வந்துற்றனர் என்பது தெரிந்து அவர் சீற்றங்கொண்டு கொண்டுவந்த சீர் வரிசைகளெல்லாம் வாரி இறைத்து, ஆறு கடந்து நகரினுள்புகாமல் அழகர்சோலை செல்லும் தருணத்தில் தாம் முன்னர் எடுத்ததான தசாவதாரங்கள் காட்டிப் பெயர்ந்ததுபோன்றும் நடாத்திவரும் திருவிழாக் கண்டோம். களிகொண்டோம். பின்னர் நம் உறைவிடம் திரும்பலுற்றோம். இவ்விழாவைக் காண நகரமாக்களும், புறநகரமாக்களும் ஏராளமே வந்துள்ளனர். அவர்கள் வசதிக்கேற்றவாறு தங்குமிடங்கள் அமைத்து, தர்ம போஜன சாலைகளும், தண்ணீர்ப்பந்தல்களும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதுபற்றி வந்தவர்கள் பசி தாகமின்றி சோலை நிழல்களிலும், மண்டபங்களிலும், வேகவதியின் மணற்பாங்குகளிலும் கூட்டங்கூட்டமேயமைந்து ஹரிசங்கீர்த்தனங்கள் பாடியும் ஹரிகதைகள் செய்தும் காலத்தைக்கழித்தனர். ஆடவர், பெண்டிர், குழவிகள் யாவரும் நூதன ஆடை தரித்தும், மின் அணிப் பூண்கள் அணிந்தும், பரிமள திரவியங்கள் பூசியும் நற்கோலங் கொண்டிருந்தனர். அதுபற்றி குரூபிகளும் ரூபிகளென விளங்கினர். அக்குழாத்தினிடையே தாராகணங்கள் மத்தியில் தாராபதியான சந்திரன் அழகுபெற விளங்குவதுபோன்று ஓர் அணங்கு விளங்கினளன்றோ! அவள் தன் இழையாயிரம் பொன்பெற்ற ஆடையும், நவரத்தினகசிதமான அணிகளும் அவளைச்சார்ந்த காரணம்பற்றி பூரண அழகுபெற்று விளங்குவதாயின. ஆடை அணிகள் ஒருவருக்கு அழகினைப் பெருக்குமென்னும் வழக்கு அவள் விஷயத்தில் பொய்த்தது. அவளது மதிமுகமும், புன்முறுவலும், அருளொழுகு பார்வையும், கம்பீரத் தோற்றமும், தோழிகள் பலரது சூழ்வும் அவளை உயர்குலத்துதித்த உத்தமியென விளக்குகிறது. அவள் யாவளோ? எக்குலம் விளக்க வந்தவளோ? அவள்தனைப் பெற்றோர் செய்துள்ள தவப்பயனே மெச்சற்பாலதாம். அவளை நோக்குங்கால் அவள் திருமணம் முடித்தாள் அல்லள் என காண்கிறது. இவளை நற்பெண்டிராய்க் கொள்ளும் பாக்கியம் வாய்ந்தவன்

யாவனோ! தபோதனர் சுந்திரானந்தர் ஆசிரமத்தில் வளர்க்கப்பட்டும், தர்மபோதங்கள் அளிக்கப்பெற்றும், தாய்தந்தையர், உற்றார் இன்னாரெனத் தெரியாக்காரணத்தால் அநாதையெனப்பல்லோர் ஓதப்பெற்றும் உள்ள என் மனமே காந்தங்கவர்ந்த அயமென ஆயின் அனையவர் விஷயம் ஒதுவானேன், நண்பரே! அவளை யாவளென நீவிர் அறிவீரோ?

வீரகேசரி:— சேனாதிபரே! அவர்தான் பாண்டியர்குலம் விளக்கவந்த பொற்கொடி. சுகுணபாண்டியர்தன் ஏகபுத்ரி. சுகுணசுந்தரி என நாமம் பெற்றவர். அவர் பின் பாண்டிய நாடு அனைத்தும் முடிசூடி ஆளும் உரிமை வாய்ந்தவர். அது பற்றி எல்லாக்கல்வி நலமும் பெற்றவர். ராஜதந்திரங்கள் முற்றும் பழகியவர். ஓவியத்துறையில் ஒப்புயர்வில்லாதவர். பரதநூலில் நன்கேபயின்றவர். கருணையாதி கல்யாணகுணங்கள் வலியவந்தடைந்தவர். அழகே திரண்டு உருவானவர். நாணம், மடம் அச்சம், பயிர்ப்பென்னும் நாற்குணமும் நாற்படையாயெய்தியவர். ஐப்புலன்கள் நல்லமைச்செனப் பொருந்தியவர். அமைச்சர்கள் புத்திரிகளென முத்துமாலை, மோகனமாலை என்னுமிரு சமவயதினரைத் தோழமைகொண்டு, கன்னிமாடத்துள் பல்சேடிகள் காவல்புரிய மேடையுள் பந்தடித்தும், ஓடி ஒளிந்தும், அம்மானை, கழற்சிக்காய், சோழி, பல்லாங்குழி, பகடை, தாயக்கட்டங்கள் ஆடியும், வீணைவேணுவாதி வாத்தியங்கள் வாசித்தும், வாய்ப்பாட்டுகள் பாடியும், ஓவியங்கள் வரைந்தும், பூஞ்செடிகொடிகள் துணிகளில் பலவர்ண நூற்களால் பிணித்தும், நன்னூற்கள் பல ஓதியும் காலத்தை சுகமே கழிக்கின்றனர். மாலைப்பொழுதில் உத்தியானஞ்சென்று உலாவுவதும், பூக்கொய்வதும், நறுமண மாலைகள் கட்டுவதும், சூடுவதும், ஆங்கமைந்துள்ள சந்திரகாந்த மேடையுற்று, கதாபிரசங்கங்களிலும், மற்றுமுள விநோதவேடிக்கைகளிலும் காலங்கழிக்கின்றனர். இவர்தனக்குக் காவலாய் பாண்டியர்தம் சிற்றப்பன் வரகுணவழுதி அமைந்துளர். அவரே இவர்தம் சகல பெருமைக்கும் காரணம் எனலாம்.

(தொடரும்





# மலையப்பசாமி

## வைத்தியசாலை, பழனி.

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும்,
ஆயிரக்கணக்கான
நற்சாக்ஷிகளும் பெற்ற அருமையான
மருந்துகள்.

சென்னை சட்டசபை பிரசிடெண்டு திவான்பகதூர்
**L. D.** சாமிக்கண்ணு பிள்ளை,
M. A., B. L., L. L. B., I. S. O., C. I. E.,
அவர்கள் தலைமையில் 1923-ல் சென்னையிலும்,

சென்னை கவர்ன்மெண்டு மந்திரி பகதூர்
**R.N.** ஆரோக்கியசாமி முதலியார், B A., B.C E.

அவர்கள் தலைமையில் 1927-ல் மதுரையிலும், டாக்டர் C. முத்து, M. D., M. R. C. S, L. R. C. P. அவர்கள் தலைமையில் 1933-ல் சென்னையிலும், சென்னை ஆயுர்வேத பூஷணம், M. துரைசாமி அய்யங்கார், ஆயுர்வேதாசார்ய அவர்கள் தலைமையில் 1934-ல் திருச்சியிலும் கூடிய சித்த ஆயுர்வேத வைத்திய மகாநாடுகளிலும், மருந்து மூலிகை கண்காக்ஷிகளிலும், எமது மருந்துகள் சிறந்தவைகளெனப் பாராட்டப்பட்டு முதல்தர தங்க மெடல்களும், நற்சான்றுகளும், பட்டங்களும் அளிக்கப்பெற்றிருக்கின்றன.

குழந்தைகளுக் கேற்படும் சகல வியாதிகளையும்
நீக்க மூன்று ரத்தினங்கள்
இருக்கின்றன.

1. பாலகுடோரிக் குளிகை.
2. பாலசஞ்சீவிக் குளிகை
3. சஞ்சீவி எண்ணெய்.

# 1. பாலகுடோரிக் குளிகை.

இக்குளிகையானது குழந்தைகளுக்கேற்படும் காய்ச்சல் ஜல தோஷம், மாந்த தோஷம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி வயிற்றுக் கடுப்பு, தலைவலி, பித்த மயக்கம், அஜீரணம், செரியாமை, முதலிய அநேகவியாதிகளை நிவர்த்திப்பதோடு தாய்மார்களும் பத்தியமின்றி சாப்பிடலாம்.

**உபயோகிக்கும் விதம்:**— தாயார் பல பதார்த்தங்களைச் சாப்பிட்ட தினத்திலும், குழந்தைகள் மந்தமான ஆகாரங்களைப்புசித்த தினத்திலும், குழந்தைகள் படுக்கப்போகும் போது 1, 2 மாத்திரையை வெந்நீர் அல்லது தாய்ப்பாலில் உரைத்துக் கொடுத்துவிட்டால் குழந்தையின் மாந்தம் நீங்கும். அன்றுடகம் இரவு ஒரு மாத்திரை கொடுத்து வர குழந்தைக்கு நல்ல பசியும் ரத்த விர்த்தியுமுண்டாகும்.

புட்டி 1க்கு விலை ரூ. 1—0—0.

# 2. பாலசஞ்சீவி குளிகை.

பாலர்களுக்கேற்படும் தொக்கம், வயிற்றுவலி, வயிற்றுப்பொருமல். பொருக்கி விழுங்கிய சகல சொருகல்கள், அஜீரணத்தால் வாந்திசெய்தல், பால் ஜீரணமாகாமல் பால் திரைந்து கட்டியாக மாக்கரைத்தாற்போல் அல்லது மஞ்சளாக மலமிறங்குதல் போன்ற மாந்தவகைசகலமும் நீங்கும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—0—0.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I**

# 3. சஞ்சீவி எண்ணெய்.

குழந்தைகளுக் கேற்படும் [illegible]ங்கல், இளைப்பு, பாலகிரி சேஷ்டை, வலிப்பு, மீறியகபக்கட்டு, ஜன்னி இவைகளுக்கு சஞ்சீவியானது, 3-நாள் காலையில் மட்டும் கொடுக்கவும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—0—0.

# கஸ்தூரி மாத்திரை.

குழந்தைகளுக்கு மிகவும் அவசியமானது. தலைமுழுக்காட்டியவுடன் உபயோகித்து வந்தால் தண்ணீர், குளிர் இவைகளினால் உண்டாகும் ஜலதோஷம், ஜுரம் முதலிய வியாதிகள் அணுகாது. பொதுவாய்த் தாய்ப்பாலில் கொடுக்கவும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—0—0.

# கரப்பான் எண்ணெய்.

குழந்தைகளுக்குத் தலையில் பொடுகு போலவாவது கைகால்கள், தேகத்தின் மற்ற பாகங்களில் சொரிகள், ரணங்கள், பத்துக்கள் போலவாவது உண்டாகி வீங்கி, அதிலிருந்து சலம்ஒழுகி துன்புறுத்துகிற கரப்பான் என்ற வியாதிக்கு கைகண்ட மருந்து. இதை தினம் காலையில் ஒரு வேளைமட்டும் உபயோகிக்கவும்.

சிறிய புட்டி 1-க்கு ரூ. 1—0—0.
பெரிய புட்டி 1-க்கு ரூ. 2—0—0.
தபால்சார்ஜ் வேறு.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I.**

189918
சென்னை-600 008

...லகள் பரிசுபெற்ற

சி. பி. சாமி

# சித்தரசம்.

சிறந்த ...கைகளால் தயார்செய்யப்பட்டது.

பத்தியம் இல்லாதது.

குணம் இல்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

---

இது சகல ரோகங்களுக்கும் உள்ளும் புறமும் உபயோகிக்க நிமிஷக்கணக்கில் குணம் தரும். இது அநேக வியாதிகளுக்குக் கொடுக்கப்பட்டு மிக அனுபவமானது. சகலவியாதிகளுக்கும் இது ஒன்றே போதுமானது. எந்த மருந்திலும் கட்டுப்படாத வியாதிகளெல்லாம் இதில் குணமாகின்றன. திடீரென்று சம்பவிக்கக்கூடிய ஆபத்தான சகல ரோகங்களும் அதி சீக்கிரம் குணமாகும். ஜுரம், இருமல், அஜீர்ணம், புளித்தேப்பம், கைகால் பிடிப்பு, ஜன்னி, பார்சவாய்வு, கிறுகிறுப்பு, மார்ச்சளி, இளைப்பு, உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், வலிப்பு, வாய்வு, அரோசிகம், பசியின்மை, விக்கல், நெஞ்சுவலி, அன்னத்துவேஷம், தலைமயக்கம், சூதக வயிற்றுவலி, குன்மம், காலரா, விரை வாய்வு முதலிய சகல ரோகங்களும் குணமாகும். நோயுள்ள இடங்களில் மேற்பூச்சாகத்தேய்க்கலாம். பல்வலி, பல்லரணை, தந்த வாய்வு, பல்லசைவு, எயிறு வீக்கம் முதலியவைகளுக்கு பஞ்சில் 3 துளி விட்டு வலியுள்ள இடத்தில் கொஞ்சநேரம் வைக்கலாம். ஒரு புட்டி கைவசமிருப்பின் எதிர்பாராது உண்டாகும் நோய்களுக்கு சமயத்தில் சிகிச்சைசெய்துகொள்ள எதுவாகும். இன்றே ஆர்டர் செய்யுங்கள்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1. டஜன் விலை ரூ. 10.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**

**பழனி S. I.**

## கட்டுரை எழுதுவோர்

### கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக மையினல் எழுதப்படவேண்டும். சித்தனில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்குள் அடங்கக்கூடிய விஷயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

2. பிரதி ஆங்கில மாதம் பத்தாம் தேதி பத்திரிகை வெளிவரும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மட்டும் பிரசுரிக்கப்படும்.

3. சித்தனில் பிரசுரமாகும் எல்லா விஷயங்களின் காபிரைட் பிரசுரம் செய்வோர்க்கே உரிமையாகும்.

4. கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியாகார்.

5. நாம் பிரசுரிக்கும் கட்டுரைகள் ஏற்கனவே உரிமையாக்கப்பட்டிருந்தால் அதற்குப் பத்திரிகாசிரியர் உத்தரவாதியன்று.

6. கட்டுரைகளை கூட்டவும், குறைக்கவும், ஏற்றுக்கொள்ள மறுக்கவும் பத்திரிகாசிரியருக்கு அதிகாரமுண்டு.

7. அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது. தபால் தலை அனுப்பினல் மட்டும் திருப்பி அனுப்பப்படும்.

### ஏஜண்டுகள் தேவை.

நமது பத்திரிகைகளை விற்பதற்கு எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,
பழனி. S. I.

**Regd. No. M. 3210.**

# மாதர் பூஷணம்!

போன்றது.

பெண்மக்களின் துயரத்தைப் போக்குவது

கர்ப்ப எண்ணெயே.

எவ்வித மனக்கவலையையும் மாற்றி
சந்தோஷத்தையும் தேக
சுகத்தையும் கொடுக்கும்.



ஒவ்வொரு ஸ்திரீகளிடத்திலும் ஒரு
புட்டி இருக்கவேண்டியது
அவசியத்திலும் அவசியமே.

மாதாந்தர காலத்திலுண்டாகும் வயிற்றுவலியை
உடனே நிறுத்தும். சரியாய்பகிஷ்டையாகும்.
கேர்ப்பாசயம், சினைப்பையிலுள்ள கேடுதல் நீங்கும்.
புட்டி 1-க்கு விலை ரூ. 2. (தபால் சார்ஜ் வேறு.)

---

மலையப்பசாமி வைத்தியசாலை,
பிராஞ்சு:- 1-54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.

**Edited, Printed & Published by Dr. C. P. Bapu at the Nityananda Press, Palni.**